MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T83R0

நோயாளி தகவல் கையேடு

# பென்சிடமைன்

(BENZYDAMINE)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

### பென்சிடமைன் (Benzydamine) வலி, அழற்சி மற்றும் காய்ச்சலைப் போக்கக்கூடியது. வாய் மற்றும் தொண்டையில் வலி தரும் அழற்சிகளான உள்நாக்கு அழற்சி (tonsilitis), தொண்டைப் புண், தொண்டைச் சளி போன்றவற்றுக்குச் சிகிச்சை அளிக்க இது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

## இந்த மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பென்சிடமைன் 2 வடிவங்களில் வருகிறது:

- வாய்க் கரைசல் (Mouthwash)
- சப்பு மிட்டாய் (Lozenges)

வாய்க் கரைசல்:

பெரியவர்கள், 1.5 – 3 மணி நேரத்திற்கு ஒரு முறை 10 - 15 மிலி கரைசல் கொண்டு வாயைக் கழுவுங்கள், அல்லது மருத்துவர் கூறுவதுபோல் கழுவுங்கள்.
சிறுவர்கள், 1.5 – 3 மணி நேரத்திற்கு ஒரு முறை 5-10 மிலி கரைசல் கொண்டு வாயைக் கழுவுங்கள், அல்லது மருத்துவர் கூறுவதுபோல் கழுவுங்கள்.
கரைசலைக் குறைந்தது 30 வினாடிகளுக்குத் தொண்டையில் படும்படி கொப்பளித்துத் துப்புங்கள், அல்லது வாய் மற்றும் தொண்டையில் சுழற்றிவிட்டுத் துப்புங்கள்.

சப்பு மிட்டாய்:

1-2 மணி நேரத்திற்கு ஒரு முறை 1 மிட்டாய் சப்புங்கள். ஒரு நாளைக்கு கூடியபட்சம் 12 மிட்டாய்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தைத் தவறவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை மட்டும் எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

கரைசலால் வாய் மற்றும் தொண்டையைக் கழுவிய பிறகு, வாய் மரத்துப் போகலாம். இதனால் தீங்கில்லை மற்றும் அது விரைவில் நீங்கிவிடும்.

சில வேளைகளில், கரைசலை முதல்முதலில் பயன்படுத்தும்போது, சிலருக்கு சுரீர் என்ற உணர்வு தோன்றலாம். இப்படி இருந்தால், அடுத்த முறை வாய் கழுவும்போது கரைசலில் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

நாக்கில் சுவை உணர்வு மாறுதல், வாய் கூசுதல், வாய் உலர்தல் அல்லது தாகம், மற்றும் வாய் சூடாகிவிட்டது போன்ற உணர்ச்சி உண்டாகலாம்.

இம்மருந்தை வாய்வழியாக உட்கொள்ளும்போது, இரைப்பை-குடல் பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படலாம்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை உங்களுக்கு இருந்தால், மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்:

- எந்த மருந்துக்காவது ஒவ்வாமை இருந்தால்.
- வேறு மருத்துவப் பிரச்சினைகள் இருந்தால்.

கரைசல் கண்களில் தெறித்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படித் தெறித்துவிட்டால், உடனே குளிர்ந்த நீரில் கண்களைக் கழுவுங்கள்.

கரைசலை விழுங்கக் கூடாது. சாதாரண அளவாகிய 15 மிலி கரைசலைத் தெரியாமல் விழுங்கி விட்டால், கவலைப்படாதீர்கள், அது எந்தப் பிரச்சினையையும் உண்டாக்காது. ஆனால் அதற்கு மேற்பட்டதை விழுங்கிவிட்டால், மருத்துவரைப் பார்க்க வேண்டும் அல்லது அருகிலுள்ள மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

இந்த மருந்தை 7 நாட்களுக்கு மேல் தொடர்ந்து பயன்படுத்தாதீர்கள். நிலைமை மோசமானாலோ அல்லது அது சரியாகவில்லை என்றாலோ, மருத்துவரைப் பாருங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தை ஒரு குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். மருந்தின்மீது ஈரம், வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.